இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 30.04.2024
O.S. 67/2017
வா.சா.1 வீரநாதன்
1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் வழக்கு 4 சென்ட்டிற்காக தாக்கல் செய்துள்ளேன். அந்த 4 சென்டின் புல எண் 637/2 ஜீ2 ஆகும். அந்த புல எண்ணிற்கான நிலை பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்ல என்றால் அது குறித்து தெரியவில்லை. எனக்கு அந்த சொத்தை எழுதி கொடுத்தவர் ஏக்கையா ஆவார். அவருக்கு அந்த சொத்து எப்படி கிடைத்தது என்றால் நடராஜன் என்பவரிடம் வாங்கினார் எந்த ஆண்டு வாங்கினார் என்று தெரியாது நடராஜனுக்கு அந்த சொத்து எப்படி கிடைததது என தெரியாது.

நடராஜன் பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றால் ஆம். நடராஜனுக்கு மொத்தம் எத்தனை சென்ட் அந்த சொத்து எல்கைகள் எனக்கு தெரியாது என்றால் எனக்கு சொத்து விவரங்கள் தெரியும் நடராஜன் ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை. நான் விலை வாங்கிய 4 சென்டின் நீளம் அகலம் எவ்வளவு என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் அந்த 4 சென்டின் நீளம் அகலத்தை அளந்து குறித்து வைக்கவில்லை என்றால் அளந்தோம் வீட்டில் குறித்து வைத்துளளேன்.

அந்த நீள அகல விவரங்கள் என் விலை பத்திரத்தில் இடம பெற்றுள்ளது. 4 சென்டை தொட்டு வடக்கே யார் சொத்து என்றால் வழக்கு தாக்கல் செய்யும் சமயம் பெரோஸ்கான் மனை. வழக்கு தாக்கல் செய்யும் சமய்ம வடக்கு பக்கம் காலியாக இருந்தது தற்போது வீடு உள்ளது. 4 சென்டின் கிழக்கே பலவேச நாடாரின் மனை உள்ளது. தெற்கே

அமலதாசனின் மனை. மேற்கே காசிதங்கம் மனை.

என் 4 சென்ட் மனைக்கு கிழக்கே மற்றும் மேற்கே காலியாக உள்ளது. வடக்கு மற்றும் தெற்கே வீடு உள்ளது. அநத் சொத்தின் பழைய புல எண் எனக்கு தெரியாது. நான் பழைய புல எண்ணிற்கு புல ஒப்புமை ஆவணம் எதுவும் எடுத்து பார்க்கவில்லை.

(1ம் பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)